## ERRIN
## ஐப் பற்றி

### புலம் பெயர்ந்தோரின் நாடு திரும்புதலுக்கும் மீள்ஒருங்கிணைப்பிற்குமான ஒரு கூட்டு அணுகுமுறைக்கு வசதியேற்படுத்தித் தருகின்றது

**நாடு திரும்புதலுக்கும் ஒருங்கிணைப்பிற்குமான ஐரோப்பிய வலையமைப்பு (European Return and Reintegration Network> ERRIN)** என்பது ஐரோப்பியாவில் இருக்க முடியாத அல்லது இனியும் தங்கியிருக்க விரும்பாத புலம் பெயர்ந்தோர்களின் நாடு திரும்புதலுக்கும் மீள் ஒருங்கிணைப்பிற்கும் வசதி ஏற்படுத்தித் தரும் 15 பங்காளர் நாடுகளின் ஒரு கூட்டமைப்பாகும். இந்த வலையமைப்பு தங்கள் பிறந்த நாட்டிற்குத் திரும்புவோருக்கு பல்வேறு வகையான தேவைகளைப் பூர்த்தி செய்து, ஆலோசனை, பரிந்துரை மற்றும் மீள் ஒருங்கிணைப்பு உதவியை வழங்குகிறது.

இத்திட்டத்தின் கீழ், சுய விருப்பிலும் சுய விருப்பிற்கு மாறாகவும் நாடு திரும்புபவர்களுக்கு இலங்கையில் அவர்களுக்கான மீள் ஒருங்கிணைப்பின் ஆரம்ப நடவடிக்கைகளில் உதவி செய்ய IRARA ஆனது சேவை வழங்குநராக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

பங்குபற்றும் தேசிய முகவரகங்களிடம் இருந்து பெற்ற இணை நிதியூதவியூடன் ஐரோப்பிய ஒன்றிய புகலிட, புலப்பெயர்வூ, ஒருங்கிணைப்பு நிதியத்தின் (AMIF) மூலம் ERRIN இற்கு நிதியளிக்கப்படுகிறது.

மேலும் விபரங்களை இங்கு கண்டறியூங்கள்:
**www.returnnetwork.eu**

## ERRIN
## பங்காளர் நாடுகள்

| | ஐரொப்பிய பங்காளர் நிறுவனங்கள் |
|---|---|
| அவுஸ்திரியா | சமஷ்டி உண்ணாட்டு அலுவல்கள் அமைச்சு |
| எசுப்பானியா | தொழிலாளர் புலப்பெயர்வுகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சு – குடிபெயர்வுத் திணைக்களம் |
| ஐக்கிய இராச்சியம் | உள்நாட்டு அலுவலகம் |
| கிரேக்கம் | உள்துறை மற்றும் நிர்வாக புனரமைப்பு அமைச்சு |
| சுவிற்சர்லாந்து | குடிபெயர்வுக்கான அரசாங்கச் செயலகம் |
| சுவீடன் | சுவீடன் குடிபெயர்வு முகவரகம் |
| டென்மார்க் | குடிவரவு மற்றும் ஒருங்கிணைப்பு அமைச்சு |
| நெதர்லாந்து | நீதி மற்றும் பாதுகாப்பு அமைச்சு - தாயகத்திற்கு அனுப்புதல், புறப்பாட்டுச் சேவை |
| நோர்வே | நோர்வே குடிவரவுப் பணிப்பகம் |
| பிரான்ஸ் | உள்துறை அமைச்சகம் - குடிவரவு மற்றும் ஒருங்கிணைப்புக்கான அலுவலகம் |
| பின்லாந்து | பின்லாந்தியக் குடிவரவுச் சேவை |
| பெல்ஜியம் | புகலிடம் கோருவோரை வரவேற்பதற்கான சமஷ்டி முகவரகம் / சமஷ்டி குடிவரவு அலுவலகம் |
| மோல்டா | உள்நாட்டலுவல்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு அமைச்சு |
| லக்சம்பேர்க் | வெளியுறவு மற்றும் ஐரோப்பிய விவகார அமைச்சகம் |
| ஜெர்மனி | மத்திய உள்துறை கட்டிடம் மற்றும் சமூக அமைச்சகம் - இடம்பெயர்வு மற்றும் அகதிகளுக்கான கூட்டாட்சி அலுவலகம் |

## எங்களைத்
## தொடர்பு கொள்க

ERRIN திட்டத்தின் கீழ் நாடு திரும்புபவர்களுக்காக கொழும்பு, கண்டி, பதுளை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் IRARA அலுவலகங்களைக் கொண்டுள்ளது.

### IRARA

**உங்களுக்கு உதவவே நாம் இங்கிருக்கிறோம்!**


| | |
|---|---|
| **வருகைதரு முகவரி** | 9 மந்திரி வீதி, கொழும்பு 5 |
| **அலுவலக நேரம்** | திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8:30 மணி முதல் மாலை 5 மணி வரை |
| ☎ | +94 (0)114 349 382 |
| @ | srilanka@irara.org |
| Skype | loc.srilanka@irara.org |
| Web | www.irara.org/srilanka |


IRARA

Chrysalis
Catalyzing change

## இலங்கை
தமிழ்

### தாடு திரும்பும் புலம் பெயர்ந்தோருக்கான

# ERRIN மீள் ஒருங்கிணைப்புத் திட்டம்

ERRIN
european return and reintegration network


Co-funded by the Asylum, Migration and Integration Fund of the European Union

Migration in Action
Migratie in Beweging

## நீங்கள் உதவி பெறத் தகுதி பெறுகிறீர்களா?

நீங்கள் ஓர் இலங்கைப் பிரஜையாக இருப்பதுடன் (மறுபக்கத்தில் பட்டியலிடப்பட்டுள்ளழு)* நீங்கள் ஒரு நுசுசுஜN பங்காளர் நாட்டில் இருந்து தாய் நாடு திரும்ப விரும்புகிறீர்கள் அல்லது திரும்ப வேண்டியிருக்கிறது என்றால்இ நீங்கள் இத்திட்டத்தில் இருந்து பயன் பெறத் தகுதி உடையவH.

நாடு திரும்புபவர்கள் எல்லா வயதினர்களாகவூம் எல்லா சுயவிபரங்களையூம் கொண்டவர்களாகவூம், சுய விருப்பிலும் சுய விருப்புக்கு மாறாகவூம் இருப்பதுடன், அதில் பின்வருவோர் உள்ளடங்கலாம்:

- புகலிடம் கோருபவர்கள்
- அனுமதி மறுக்கப்பட்ட புகலிடம் கோருபவர்கள்
- வழமையான, வழமைக்கு மாறான புலம் பெயர்ந்தோர்
- துணையில்லாத பராயமடையாதவர்கள்
- பாதிப்பிற்குள்ளாகக்கூடிய ஏனையோர்

பங்காளர் நாட்டில் உள்ள பொறுப்பு ஆணையங்களால் தகுதி தீர்மானிக்கப்படுகிறது. மீள் ஒருங்கிணைப்பு உதவி அத்தகைய ஆணையங்களால் ஒரு நேர்ச் சரிபார்ப்புச் சோதனைக்குப் பிறகு மட்டுமே வழங்கப்படும்.

நீங்கள் ஒரு பங்காளர் நாட்டிலிருந்து திரும்பியிருந்து, இன்னமும் மீள் ஒருங்கிணைப்புச் சேவைக்காக விண்ணப்பித்திராவிடின், நீங்கள் இன்னமும் தகுதி பெறலாம். மேலும் தகவல்களுக்காக, IRARA அலுவலகங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

## நீங்கள் எவ்வாறு விண்ணப்பிக்கலாம்?

நீங்கள் ERRIN பங்காளர் நாடுகளில் ஒன்றில் உள்ள ERRIN தொடர்பு வாயிலாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் மேலும் தகவலை உங்கள் சமூக சேவகரிடம் அல்லது ஆலோசகரிடமிருந்து பெறலாம்.

உங்களின் மீள் ஒருங்கிணைப்புச் சேவைகள் ERRIN பங்காளர் நாட்டின் அனுமதியின் பின்னரே செயற்படுத்தப்படும்.

நீங்கள் ஏற்கனவே இலங்கைக்குத் திரும்பியிருந்தால், நீங்கள் இந்தப் படிவத்தின் பின் பக்கத்தில் வழங்கப்பட்டிருக்கும் தொடர்பு விபரங்களைப் பயன்படுத்தி IRARA இன் உண்ணாட்டுப் பிரதிநிதிகளைத் (Chrysalis) தொடர்பு கொள்வதன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

*தற்சமயம் இலங்கையில் உள்ள ERRIN வாயிலாக வழங்கப்படும் மீள் ஒருங்கிணைப்பு உதவியை, வலையமைப்பில் உள்ள எல்லாப் பங்காளர் நாடுகளும் பயன்படுத்துவதில்லை என்பதைக் கவனியுங்கள். இது மாற்றத்துக்கு உட்படலாம். அண்மைய தவகல்களை உங்கள் ஆலோசகரிடம் இருந்து அறிந்துகொள்ளுங்கள்.

## என்ன உதவி வழங்கப்படலாம்?

நீங்கள் ERRIN திட்டத்தின் கீழ் ஒரு நாடு திரும்புபவர் என்ற வகையில், நீங்கள் உங்களின் தாய் நாட்டுக்குத் திரும்பியதும் நீங்கள் வாழ்க்கையைத் தொடங்க உதவ IRARA வாயிலாக வழங்கப்படும். எண்ணற்ற நாடு திரும்புதல், மீள் ஒருங்கிணைப்புச் சேவைகளுக்குத் தகுதி பெறலாம்.

இச்சேவைகள் (மற்ற வகையில் குறிப்பிடப்பட்டாலன்றி) வகை சார் அடிப்படையில் வழங்கப்படுகின்றன, மேலும் இவை நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள், உங்கள் சுயவிபரங்கள், உங்களுக்குச் சிறப்புத் தேவைகள் உள்ளனவா என்பவற்றின் அடிப்படையில் வேறுபடலாம்.

## பின்பற்ற வேண்டிய நடைமுறை

### புறப்பட முன்னர்

உங்கள் விண்ணப்பம் ERRIN பங்குதாரர் நாட்டில் உள்ள ஆணையங்களால் அங்கீகரிக்கப்பட்டிருந்தால், தேவையான ஏற்பாடுகளைச் செய்ய உதவ நீங்கள் IRARA (www.irara.org) இடமிருந்து தகவல்களைக் கோரலாம்.

### நீங்கள் வந்து சேரும் போது

நீங்கள் இலங்கைக்கு வந்து சேர்ந்த பிறகு IRARA உங்களுக்கு அடிப்படை உதவியை வழங்கலாம்.

- விமான நிலையத்திலிருந்து அழைத்துச் செல்லல் அல்லது வந்து சேருமிடத்தில் வரவேற்றல்.
- உள்நாட்டிலிருந்து பயண உதவி
- தற்காலிகத் தங்குமிடம்
- அவசர மருத்துவப் பராமரிப்புக்கான பரிந்துரைகள்
- பிற அடிப்படைத் தேவைகள்

## மறு ஒருங்கிணைப்புச் சேவைகள்

IRARA கிடைக்கப் பெறும் நிதியுதவித் தொகைக்கு உட்பட்டு, உங்கள் சூழ்நிலையையும் தேவைகளையும் கருத்திற் கொள்ளும், உங்களுக்கு ஏற்ற ஒரு மீள் ஒருங்கிணைப்புத் திட்டத்தை உங்களுடன் சேர்ந்து உருவாக்கும். சேவைகளில் உள்ளடங்கக் கூடியவை:

- சமூக, சட்ட, மருத்துவ உதவி
- நீண்ட கால வீட்டு வசதி உதவி
- பாடசாலைக்குச் செல்லலும் மொழிப் பயிற்சியும்
- வேலை நியமன உதவி
- தொழினுட்ப, தொழிற் பயிற்சி
- வியாபாரத் தொடக்க உதவி
- எளிதில் பாதிக்கப்படும் நிலையிலுள்ள குழுக்களுக்கான பாதுகாப்பு உதவி

## அறிமுகம்

இலங்கையில் ERRIN திட்டத்தை வழங்க **IRARA** ஆனது Chrysalis உடன் கூட்டிணைந்துள்ளது. Chrysalis (முன்னதாக CARE International) என்பது குடிமக்களுக்குத் தமது தாய் நாட்டில் மீண்டும் குடியேறி பழைய நிலையை அடைய உதவுவதன் மீது கவனம் செலுத்தும் ஓர் இலங்கைச் சமூக நிறுவனமாகும்.

IRARA இன் தொழின்முறை ஆலோசகர்கள் அனைவரும் இலங்கை நாட்டவர்களாவர். அவர்கள் தனியாள் தேவைகளுக்கு ஏற்ப உருவாக்கப்படும் மீள் ஒருங்கிணைப்பு வெற்றிக்காக ஆலோசனையும் ஆதரவும் வழங்குவதன் மூலம் குடிமக்களை மீண்டும் குடியமர்த்துவதில் மிகுந்த அனுபவத்தைக் கொண்டவர்களாவர்.